# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.93/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கொணஸ்தாமேரி | Husband's Name | : | பன்னீர்செல்வம் |
| Village | : | ஆலத்தாங்குடி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 56 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 20th day of November 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆளத்தாங்குடியில் வசித்து வருகிறேன். நான் என் கணவருடன் சேர்ந்து மளிகை கடை வைத்து பிழைத்து வருகிறேன். எனக்கு 2 மகள்கள் ஒரு மகன் உள்ளார்கள். என் மகன் பிரதாப் என்னுடன் இருக்கிறார். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரியின் மகள் கல்யாணத்திற்காக நாங்கள் ரூ.4,00,000/- பணம் கொடுத்திருந்தோம். அந்த பணத்தை அவர் திரும்ப கொடுக்காததால் கிராம பஞ்சாயத்து தலைவர் மற்றும் பஞ்சாயத்தார்களிடம் சொல்லி வசூல் செய்து கொடுக்க சொன்னோம்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:03:55 +0530

அவர்கள் பஞ்சாயத்து பேசி ரூ.50,000/- பணம் வாங்கி கொடுத்தார்கள். நான் பஞ்சாயத்தில் சொல்லி எதிரியிடமிருந்து பணம் வாங்கி எனக்கு கொடுத்ததால் எதிரி எங்கள் மீது பகை கொண்டிருந்தார். 03.03.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும் என் கணவரும் எங்கள் மளிகை கடையிலிருந்தபோது எதிரி எங்களின் கடைக்கு வந்து தேவடியா, குச்சிகாரி மகனே வெளில வாடா என சொல்லி தரக்குறைவாக பேசினார். என் கணவர் யாரடா தரக்குறைவாக பேசுற என கேட்டார். என் கணவரை பார்த்து எதிரி உன்னைதான் எதிர்பார்த்தேன் என கூறி என் கடையிலிருந்த சோடா பாட்டிலை எடுத்து என் கணவரின் இடது நெஞ்சு பகுதி, இடது கை மணிகட்டு, இடது கட்டை விரல் ஆகிய இடங்களில் குத்தி கிழித்து விட்டார். தடுக்க போன என்னை தள்ளிவிட்டு என் வலது கை முழங்கைக்கு மேல் சோடா பாட்டிலால் குத்தி எனக்கு காயம் ஏற்படுத்தினார். நான் சத்தம் போடவே என் மகன் பிரதாப், என் மகள் மேனகா, தாமோதரன் மற்றும் தெருவில் உள்ளவர்கள் அந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள். என்னையும் என் கணவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் கொண்டுவந்து சேர்த்தார்கள். என் கணவருக்கு காயம் அதிகமாக இருந்ததால் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:03 +0530

திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படுவது போலீசாரிடம் நான் கொடுத்த புகார் வாக்குமூலம்தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**. என்னை காயப்படுத்தியவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பாட்டிலால்தான் என்னையும் என் கணவரையும் சம்பவத்தின்போது தாக்க ஆஜர் எதிரி பயன்படுத்திய பாட்டிலாகும். அந்த பாட்டில் **சா.பொ.1**. என் கணவர் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 4 நாட்கள் சிகிச்சை பெற்றும் பின்னர் என் கணவரின் இடது கை கட்டைவிரல் செயலிழந்து விட்டதால் பின்னர் 15 நாட்களும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எங்களுக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல்-வாங்கல் சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்தது என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் திங்கள்கிழமை. அன்று மாலை நேரம் என்பதால் நாங்கள் வைத்திருந்த கடையில் கூட்டம் அதிகமாக இருந்தது. நானும் என் வீட்டுக்காரரும் எங்கள் கடையில் இருந்தோம். எங்கள் கடைக்கு பக்கத்தில் ஜோதி என்பவர் இருந்தார். எதிரி குடித்துவிட்டு வந்ததாக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:10 +0530

புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஆனால், நிதானமாகத்தான் இருந்தார். அ.சா.ஆ.1 யை கொரடாச்சேரி போலீசார் எழுதினார். 3 ம் தேதி இரவே நாங்கள் கொடுத்த தகவலை போலீசார் எழுதிக் கொண்டார்கள். 4 ம் தேதி புகார் எதுவும் எங்களிடம் எழுதி வாங்கவில்லை என்றால் சரி. என் மகன் கடைக்கு பக்கத்தில் உள்ள ஓட்டு வீட்டில் இருந்தான். சம்பவம் நடந்தது சுமார் 5 நிமிடமிருக்கும். அப்போது எதிரிக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. எங்களை அடிக்க பயன்படுத்திய பாட்டில் அந்த இடத்திலேயேதான் கிடந்தது. மறுநாள் வந்து போலீசார் அந்த இடத்திலிருந்து பாட்டிலை எடுத்து சென்றார்கள். எனக்கு வலது கையில் காயம். எனக்கு இடது பக்க புஜத்தில் காயம். நாங்கள் மருத்துவரிடம் செல்லும்போது என் வீட்டுக்காரர் மயக்கத்தில் இருந்தார், நான் நிதானத்தில் இருந்தேன். மருத்துவரிடம் நான் காயம் ஏற்பட்ட விதத்தை சொன்னேன். எனக்கு கத்திக்கும் பாட்டிலுக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வதுபோல் என்னையும் என் கணவரையும் எதிரி பாட்டிலால் அடித்தும், குத்தியும் காயப்படுத்தினார் என சொல்லும் சங்கதி உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் தவறு. வெளியில் சத்தம் கேட்குதே என அவசரமாக என் கணவர் கடையிலிருந்து வெளியில் எழுந்து வரும்போது எங்கள் கடையில் அடுக்கி வைத்திருந்த பாட்டில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:17 +0530

உடைந்து அதனால் என் கணவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் தவறு. என் கணவர் விழும்போது நான் என் கணவரை போய் தூக்கும்போது எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் தவறு. எங்களுக்கும் எதிரிக்குமிடையே இருந்த பணம் சம்மந்தப்பட்ட முன் விரோதத்தின் காரணமாக தற்செயலாக என் வீட்டுக்காரர் விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:24 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.93/2025**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரதாப் | Father's Name | : | பன்னீர்செல்வம் |
| Village | : | ஆலத்தாங்குடி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 34 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 20th day of November 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலத்தாங்குடியில் வசித்து வருகிறேன். நான் சிவில் இஞ்சினியர் படித்துவிட்டு வீட்டிலிருந்தபடி கட்டிட வேலை செய்து வருகிறேன். நான் என் அப்பா, அம்மா, மனைவியுடன் ஒன்றாக வசித்து வருகிறோம். அ.சா.1 என் அம்மா. எங்கள் வீட்டிற்கு முன்பு என் அப்பா, அம்மா பெட்டிக் கடை வைத்துள்ளார்கள். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 03.03.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் என் வீட்டில் நான் என் அக்கா மேனகாவுடன் பேசிக் கொண்டிருந்தபோது வீட்டிற்கு முன்புறம் உள்ள

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:31 +0530

எங்கள் கடையில் சத்தம் கேட்டது. நான் வெளியில் வந்து பார்த்தபோது எதிரி என் அப்பாவையும், அம்மாவையும் தேவடியா, குச்சிகாரி மகனே என திட்டிக் கொண்டிருந்தார். எதிரி எங்களிடம் வாங்கியிருந்த ரூ.4,00,000/-த்தை திரும்ப கொடுக்காததால் ஊர் முக்கியஸ்தர்களிடம் சொல்லி ரூ.50,000/- மட்டும் திரும்ப கொடுத்தார். இந்த பணம் விஷயமாக ஊர் முக்கியஸ்தர்களிடம் சொன்னதால் எங்கள் மீது எதிரி முன் விரோதம் கொண்டிருந்தார். 03.03.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் எங்கள் கடை வாசலிலிருந்த சோடா பாட்டிலை உடைத்து எதிரி தாக்கியபோது என் அப்பாவின் இடது புஜம், இடது மணிகட்டு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது, தடுக்க சென்ற என் அம்மாவின் வலது முழங்கைக்கு மேல் காயம் ஏற்பட்டது. நானும் என் அக்காவும் தடுக்க வந்தபோது எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். என் அப்பாவையும் அம்மாவையும் அழைத்து வந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். என் அப்பாவிற்கு காயம் அதிகமாக இருந்ததால் என் அப்பாவை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக என் அம்மா போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார். என் அப்பா 15 நாட்கள் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். தற்போது

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:38 +0530

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பாட்டில்தான் என் அப்பாவை எதிரி தாக்க பயன்படுத்தியது. நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிதான் என் அப்பாவை பாட்டிலால் தாக்கினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது வெளிநாடு சென்று வேலைபார்த்துவிட்டு திரும்ப வந்தேன். நான் என் தாய், தந்தைக்கு ஒரே மகன். எனக்கு 2 அக்காக்கள் உள்ளார்கள். அக்கா மேனகா என்னுடைய பெரியப்பா மகள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இருட்டு நேரம் என்றால் சரி. நான் வீட்டிற்குள் அக்கா மேனகாவுடன் பேசிக் கொண்டிருந்தேன். நான் வீட்டை விட்டு வெளியில் வருவதற்குள் சம்பவம் முடிந்துவிட்டது என்றால் இல்லை, சத்தம் கேட்டு வெளியில் வந்துவிட்டேன். எங்கள் வீட்டு கடை வாசலில் விற்பனைக்காக சோடா பாட்டில்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. நான் பிரச்சனை நடந்த இடத்திற்கு செல்வதற்குள் எதிரி சத்தம்போட்டுவிட்டு சென்று விட்டார். என் அப்பா வயதானவர் வெளியில் சத்தம் கேட்பதை பார்ப்பதற்காக கடையிலிருந்து அவசரம் அவசரமாக வெளியில் போனபோது வாசலில் அடுக்கி வைத்திருந்த பாட்டில் கால் வைத்து உடைந்து அதில் என் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டு விட்டது எனவும் சொன்னால்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:44 +0530

தவறு. என் குடும்பத்திற்கும் எதிரிக்குமிடையே பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்ததால் எதிரி அங்கு வந்ததாகவும் என் தந்தையை தாக்கியதாகவும் அதை தடுக்க சென்ற என் தாயாருக்கும் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரி மீது உள்ள முன் விரோதம் காரணமாக எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் அதை நான் தடுக்க முயற்சித்திருப்பேன் எனவும் சம்பவமே நடக்கவில்லை எனவும் எதிரி என் தந்தை, தாயை தாக்கவில்லை எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.93/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மேனகா | Husband's Name | : | வினோதகன் |
| Village | : | ஆலத்தாங்குடி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 20th day of November 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலத்தாங்குடியில் வசித்து வருகிறேன். நான் அத்திக்கடை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் Computer Operator ஆக வேலை செய்து வருகிறேன். என் வீட்டிற்கு அருகே என் பெரியப்பா, பெரியம்மா, அவரது மகன் பிரதாப் ஆகியோர் வசித்து வருகிறார்கள். அ.சா.1 என் பெரியம்மா. பெரியப்பா வீட்டிற்கு முன்பு பெரியப்பா, பெரியம்மா பெட்டிக் கடை வைத்துள்ளார்கள். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 03.03.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் பெரியப்பா வீட்டில் நான் என் தம்பி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:04:56 +0530

பிரதாப்புடன் பேசிக் கொண்டிருந்தபோது வீட்டிற்கு முன்புறம் உள்ள பெரியப்பா கடையில் சத்தம் கேட்டது. நான் வெளியில் வந்து பார்த்தபோது எதிரி என் பெரியப்பாவையும், பெரியம்மாவையும் தேவடியா, குச்சிகாரி மகனே என திட்டிக் கொண்டிருந்தார். எதிரி அவர்களிடம் வாங்கியிருந்த ரூ.4,00,000/-த்தை திரும்ப கொடுக்காததால் ஊர் முக்கியஸ்தர்களிடம் சொல்லி ரூ.50,000/- மட்டும் திரும்ப கொடுத்தார். இந்த பணம் விஷயமாக ஊர் முக்கியஸ்தர்களிடம் சொன்னதால் அவர்கள் மீது எதிரி முன் விரோதம் கொண்டிருந்தார். 03.03.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் கடை வாசலிலிருந்த சோடா பாட்டிலை உடைத்து எதிரி தாக்கியபோது என் பெரியப்பாவின் இடது புஜம், இடது மணிகட்டு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது, தடுக்க சென்ற என் பெரியம்மாவின் வலது முழங்கைக்கு மேல் காயம் ஏற்பட்டது. நானும் என் தம்பி பிரதாப்பும் தடுக்க வந்தபோது எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். என் பெரியப்பா, பெரியம்மாவை அழைத்து வந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். என் பெரியப்பாவிற்கு காயம் அதிகமாக இருந்ததால் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக என் பெரியம்மா போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார். என் பெரியப்பா 15 நாட்கள் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:05:04 +0530

பெற்றார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பாட்டில்தான் என் பெரியப்பாவை எதிரி தாக்க பயன்படுத்தியது. நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிதான் என் பெரியப்பாவை பாட்டிலால் தாக்கினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

வீடும் கடையும் தனித்தனியாக உள்ளது என்றால் சரி. நானும் என் தம்பி பிரதாப்பும் வீட்டிற்குள் பேசிக் கொண்டிருந்தோம், சத்தம் கேட்டுதான் வெளியில் வந்தோம் என்றால் சரி. நாங்கள் போவதற்குள் சம்பவம் முடிந்துவிட்டது. பெரியப்பாவை எதிரி பாட்டிலால் தாக்கியதில் காயம் ஏற்பட்டது எனவும் அதை தடுக்க சென்ற என் பெரியம்மாவிற்கும் காயம் ஏற்பட்டது எனவும் என் பெரியப்பாவிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு. எதிரி பெரியப்பாவையோ பெரியம்மாவையோ தாக்கவுமில்லை, காயப்படுத்தவுமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:05:11 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.93/2025**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பன்னீர்செல்வம் | Father's Name | : | சோமு |
| Village | : | ஆலத்தாங்குடி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 56 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 20th day of November 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலத்தாங்குடியில் வசித்து வருகிறேன். என் வீட்டிற்கு பக்கத்தில் சிறிய பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என் மனைவி, அ.சா.2 என் மகன், அ.சா.3 என் சகோதரரின் மகள். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி என்னிடம் ரூ.4,00,000/- கடனாக தொகை வாங்கியிருந்தார். மேற்படி தொகையை பலமுறை எதிரியிடம் கேட்டும் எதிரி தராததால் கிராம முக்கியஸ்தர்களிடம் சொல்லியிருந்தேன். கிராம முக்கியஸ்தர்கள் எதிரியிடமிருந்து ரூ.50,000/- மட்டும் வசூல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:05:18 +0530

செய்து கொடுத்தார்கள். நான் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக கிராம முக்கியஸ்தர்களிடம் சொல்லியதால் எதிரி என்மீது விரோதம் கொண்டிருந்தார். 03.03.2025 ம் தேதி இரவு 8.00 மணியளவில் என்னுடைய பெட்டி கடையில் நானும் என் மனைவியும் இருந்தபோது கிருஷ்ணமூர்த்தி சத்தம் போட்டுக்கொண்டு ஓடிவந்து நான் சொல்லியும் கேட்காமல் நீ கிராமத்தில் சொல்லி என் மானத்தை வாங்கி விட்டாய், உன்னை உயிரோடு விட்டால் சரிவராது, உன்னை கொன்றால்தான் என் மனம் ஆறும் என கூறிக்கொண்டே என் கடையிலிருந்த சோடா பாட்டிலை எடுத்து என்னுடைய இடது பக்க தோள்பட்டையிலிருந்து நெஞ்சு வரை பாட்டிலால் குத்தி கிழித்தும் இடது பக்க மணிக்கட்டில் சோடா பாட்டிலால் குத்தியும்இடது கை மோதிரி விரல் ஆகிய இடங்களில் காயங்களை ஏற்படுத்தினார். சாட்சி தனக்கு ஏற்பட்ட காயத்தை நீதிமன்றத்தில் காட்டுகிறார். தடுக்க வந்த என் மனைவியை அதே சோடா பாட்டிலால் முழங்கையில் குத்தி இரத்தக் காயத்தை ஏற்படுத்தினார். என்னை சோடா பாட்டிலால் காயம் ஏற்படுத்தி கொண்டிருந்தபோது என் மகன் பிரதாப்பும் என் அண்ணன் மகள் மேனகாவும் அங்கு ஓடிவரவே எதிரி பாட்டிலை காட்டி இன்னைக்கு தப்பிச்சுட்ட உன்னை விடமாட்டேன் என சொல்லி அங்கிருந்து ஓடிவிட்டார். காயம்பட்ட எங்களை பிரதாப்பும் மற்றவர்களும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:05:25 +0530

108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து சிகிச்சையில் சேர்த்தார்கள். எனக்கு காயம் அதிகம் இருந்ததால் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 15 நாட்கள் சிகிச்சையிலிருந்தேன். இது சம்மந்தமாக என் மனைவி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சோடா பாட்டிலால்தான் சம்பவத்தின்போது எதிரி என்னையும் என் மனைவியையும் தாக்கினார். போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

என் வீட்டை ஒட்டி தனியாக கடை உள்ளது. என் வீட்டு வாசலில் கடை கிடையாது. என் அண்ணன் மகள் மேனகாவின் வீடு எங்கள் தெருவில் கடைசியில் உள்ளது. ரொம்ப நேரம் பிரச்சனை இல்லை, 5 / 6 நிமிடத்தில் பிரச்சனை நடந்து முடிந்து விட்டது. போலீசார் என்னை விசாரித்தபோது கிருஷ்ணமூர்த்தி மது அருந்திவிட்டு வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அவர் மது அருந்தினாரா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது. என் கடையின் ஷோ கேஸ் முன்னாடி சோடா மற்றும் கலர் பாட்டில்களை வைத்திருப்பேன் என்றால் சரி. பணம் கொடுக்கல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:05:32 +0530

வாங்கல் சம்மந்தமாக எனக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும் பிரச்சனை இருந்து முடிந்து விட்டது என்றால் சரி. ஏதோ சத்தம் கேட்டு அவசரமாக நான் கடையை விட்டு வெளியில் வரும்போது கடை வாசலில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சோடா பாட்டில் உடைந்து அதன் மூலம் எனக்கு காயம் ஏற்பட்டுவிட்டது என்றால் தவறு. முன் விரோதத்தின் காரணமாக எதிரி மீது எதிரி தாக்கியதாகவும் காயப்படுத்தியதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:05:38 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.93/2025

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தாமோதரன் | Father's Name | : | ராஜமாணிக்கம் |
| Village | : | ஆலத்தாங்குடி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 20th day of November 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலத்தாங்குடியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் மற்றும் அ.சா.1 முதல் அ.சா.4 எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். புகார்தாரருக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்து வந்தது. நான் அந்த கிராமத்தின் தலைவராக உள்ளேன். அவர்களுக்குள் ஏற்பட்ட பணப் பிரச்சனையை என் தலைமையில் பேசி முடித்தோம். எதிரியிடமிருந்து ரூ.50,000/-த்தை பன்னீர்செல்வத்திடம் வாங்கி கொடுத்தோம். 03.03.2025 ம் தேதி இரவு 7.00 லிருந்து 8.00 மணிக்குள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:05:45 +0530

பன்னீர்செல்வத்தின் கடை வாசலில் சத்தம் கேட்டது. என் வீடு 100 மீட்டர் தொலைவில் இருக்கும். நான் என் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளை எடுத்துகொண்டு பன்னீர்செல்வத்தின் கடை வாசலுக்கு வந்தேன். அப்போது பன்னீர்செல்வத்தின் இடது நெஞ்சு, கை மணிகட்டிலும், அவரது மனைவி மேரிக்கு வலது முழங்கைக்கு மேலும் இரத்தக் காயத்துடன் இருந்தார்கள். அவர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று கேட்டேன். கிருஷ்ணமூர்த்தி சோடா பாட்டிலால் குத்திவிட்டு ஓடிவிட்டதாக சொன்னார்கள். காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. கேள்விபட்டதாக சொல்லும் சங்கதி உண்மையல்ல என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:05:53 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.93/2025**

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நாகூரான் | Father's Name | : | முனியாண்டி |
| Village | : | ஆலத்தாங்குடி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 48 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 20th day of November 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலத்தாங்குடியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்க்கிறேன். கடந்த 04.03.2025 ம் தேதி காலை 9.00 மணியளவில் நானும் பார்த்தீபனும் பன்னீர்செல்வம் வீட்டருகே வந்தபோது போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்தை நானும் 2 வது கையெழுத்தை பார்த்தீபனும் போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. பின்னர் 10.00 மணியளவில் அந்த இடத்திலிருந்து உடைந்த நிலையில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:06:00 +0530

கிடைந்த சோடா பாட்டில் ஒன்றை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் நான் முதல் சாட்சியாகவும் பார்த்தீபன் 2வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3**. மேற்படி சோடா பாட்டில் ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

நான் வேலைக்கு சென்றுவிடுவதால் போலீஸ்காரர் ஊருக்குள் வந்த விபரம் எனக்கு தெரியாது. என் முன்னிலையில் போலீசார் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரி. இரத்தம் கொட்டிகிடந்த இடத்தை காவல் துறையினர் விசாரித்தார்கள். மற்ற விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது, போலீசாரும் என்னிடம் சொல்லவில்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:06:06 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.93/2025**

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆசைத்தம்பி | Father's Name | : | நாகராஜன் |
| Village | : | ஆலத்தாங்குடி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 20th day of November 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலத்தாங்குடியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.6 மற்றும் எதிரியை தெரியும். 04.03.2025 ம் தேதி பகல் 2.00 மணியளவில் நானும் கங்காதரன் என்பவரும் வெண்ணவாசல் ஒயின் ஷாப்பில் பேசிக் கொண்டிருந்தபோது கொரடாச்சேரி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தியை பிடித்து வைத்திருந்தார். அப்போது கிருஷ்ணமூர்த்தி போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரியின் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:06:13 +0530

கங்காதரன் 2 வது சாட்சியாகவும் எதிரி கிருஷ்ணமூர்த்தியும் கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

வெண்ணவாசல் டாஸ்மாக் கடை அருகில் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரி. நான் வெண்ணவாசல் பகுதியை சேர்ந்தவர் இல்லை, ஆலத்தாங்குடி என் ஊர். அ.சா.1, அ.சா.4 எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். அவர்கள் எனக்கு நெருங்கிய பழக்கம் உள்ளவர்கள். என்னை கொரடாச்சேரி காவல் நிலையத்திற்கு போலீசார் அழைத்திருந்தார்கள். காவல் நிலையத்தில்தான் என்னிடம் போலீசார் கையெழுத்தை வாங்கினார்கள். வெண்ணவாசல் கடைத்தெருவில் எதிரியை போலீசார் கைது செய்யவில்லை எனவும் எதிரி போலீசாரிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.20 16:06:20 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.